<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லாவரம்</u>

**<u>அசல் வழக்கு எண்.939/2023</u>**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியாகிய 4–வது நபரின் வாக்குமூலம் 1896–ஆம் ஆண்டு 44வது விதியின் ஏற்பாட்டின் திரு.சி.ப.முல்லைவாணன்,பி.ஏ.,பி.எல்., (Hons) மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நீதிபதி, பல்லாவரம் ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | வில்வமூர்த்தி |
| த/பெ, க/பெ | : | ஏழுமலை |
| வயது | : | |
| தொழில் | : | |
| கிராமம் | : | |
| வட்டம் | : | |

**<u>முதல் விசாரணை – வா.சா. 4</u>**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு சாட்சி ஆவேன். நான் இத்துடன் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். இதில் உள்ள சங்கதிகள் யாவும் நான் சொல்லிதான் தட்டச்சு செய்யப்பட்டதுதான்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. என்ன தொழில் செய்து வருகிறீர்கள் என்றால் பில்டிங் கன்ஸ்ட்ரக்ஷன் தொழில் செய்து வருகிறேன் இந்த வழக்கு யாருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் மின்வாரியத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்த நிறுவனம் வாக்குமூலத்தில் வழக்கு நடைபெறும் சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என குறிப்பிட்டுள்ளேன் என்றால் 64 சென்ட் என குறிப்பிட்டுள்ளேன்.தாவா சொத்து என்ன வகை பாட்டை சேர்ந்தது என்றால் பட்ட இடமாகும். பாவ சொத்து நஞ்சை வகைப்பாடு அல்லது புஞ்சை வகைப்பாடு என்றால் புஞ்சை வகைப்பாடு அது களத்து மேடாக இருந்தது. மேய் கால் புறம்போக்கு களத்துமேடு ஆகியவை அரசுக்கு பாத்தியமான சொத்து என்றாலும் தனி நபருக்கு அச்சொத்து உரிமை ஏதும் கிடையாது என்றால் சரியல்ல.வெங்கட்ராம ஐயர் எழுதி வைத்த பரிவர்த்தனை பத்திரத்தை படித்து பார்த்துள்ளீரா என்றால் பார்த்துள்ளேன்.அந்த ஆவணத்தில் எந்த பக்கத்தில் அச்சொத்து தனக்கு எந்த பட்டா வழங்கப்பட்டுள்ளதாக வெங்கட்ராம ஐயர் குறிப்பிட்டுள்ளார் என்றால் அது ஆவணத்தில் இரண்டாவது பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

2. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 1 ஆவணமான வெங்கட்ராம ஐயர் எழுதிக் கொடுத்த பரிவர்த்தனை பத்திரத்தில் பட்டா எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அந்த ஆவணத்தில் ஊருக்கு பொதுவான இடத்தை எடுத்துக் கொண்டு பட்டா இடத்தை கொடுப்பதாக

குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா சொத்தானது என்ன விவசாய பயன்பாடு செய்யப்பட்டது என்றால் களத்து மேடாக பயன்படுத்தப்பட்டு வந்தது தற்போது தாவா சொத்து அருகே விவசாயம் செய்யப்படுகிறதா என்றால் ஒரு சில இடங்களில் மட்டும் தான் விவசாயம் செய்கிறார்கள். எந்தெந்த புல எண்ணில் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றும் அதற்கு உண்டான அடங்கல் ஆவணங்கள் ஆகியவற்றை வாதி வழக்கில் தாக்கல் செய்துள்ளார் என்றால் இல்லை.நான் நிறுவன வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள பூவிருந்தவல்லி நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு யாருக்கு எதிராக நடைபெற்றது என்றால் பல்லாவரம் நகராட்சிக்கு எதிராக நடைபெற்றது. மின்வாரியத்திற்கு எதிராகவும் வருவாய் துறை எதிராகவும் வழக்கு தீர்ப்பு வழங்கப்படவில்லை என்றால் சரிதான். நகராட்சிக்கு எதிராக தரப்பட்ட தீர்ப்பானது வருவாய் துறைக்கு கட்டுப்படுத்துமா என்றால் அந்த இடத்தில் யாரும் நுழைய கூடாது என தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது.அஸ்தினாபுரம் கிராமத்தில் 20 நகரங்கள் இருக்குமா என்றால் இருக்கும். ஒவ்வொரு நகருக்கும் தனித்தனியாக நல சங்கங்கள் உள்ளது என்றால் சரிதான் அதன் நல சங்கங்கள் மின்வாரியம் கேட்டுள்ளார்கள் என்றால் அது பற்றி தெரியவில்லை. தாவா சொத்தானது வருவாய்த்துறையினர் மின்வாரிய அலுவலகத்திற்கு துணை மின் நிலையம் அமைப்பதற்காக வழங்கி உள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வெங்கட்ராம ஐயர் கொடுத்த பரிவர்த்தனை ஆவணத்தில் எந்த இடத்திலும் தாவா சொத்து தனக்கு பாத்தியமான பட்டா சொத்து என குறிப்பிடவில்லை என்றாலும் வாதிக்கு ஆதரவாக வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**.
S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.
S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.